REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 17உ வெள்ளி (2—9—55) ★ ★ வெளியூர்: ஆவணி 18உ சனி (3—9—55) [இதழ் 69

ஒன்பதாண்டு சிறைத் தண்டனை!

பஞ்சிம் (கோவா), செப் 1—

சர்க்காருக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக நான்கு கோவாக்காரர்களுக்கும், இரு இந்தியர்களுக்கும் ஒன்று முதல் ஒன்பது ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை தந்து கோவா இராணுவ நீதிமன்றம் ஒன்று தீர்ப்பு வழங்கியிருக்கிறது.

கடந்த ஜனவரி 26-ந் தேதியன்று இந்த ஆறு பேர்களும் கோவா எல்லைக்குள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிகிறது.

இரண்டு இந்தியர்களுக்கும் ஒன்பது ஆண்டுகள் சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்பட்டுள்ளதாம்.

ஆரே பால் பண்ணை ஊதாரித்தனம் அம்பலம்!

அதிகாரிகள் அனுமதியின்றியே ரூ. 2 கோடி செலவிடப்பட்டிருக்கிறது

நடைமுறையில் தீவிர குறைபாடு இருக்கிறது

சி. ஆர். பாராட்டிய பம்பாய் அரசாங்கத்திற்கு கணக்கு ஆய்வுக் குழுவின் நற்சாட்சி

புனா, ஆக. 31—

"தொழில் துறை அனுமதியும், நிர்வாகத் துறை ஒப்புதலும் பெருமலேயே' ஆரே பால் பண்ணை விவகாரத்தில் ரூ. 2 கோடிக்கு அதிகமாகச் செலவிடப்பட்டிருக்கிறது; இப்போக்கு, 'நடைமுறையில் தீவிரக் குறைபாடு' உடையதாகும்."

"பால் பண்ணை விஸ்தரிப்புக்காகச் செலவிடப்பட்டுள்ள தொகை ரூ. 3,35,00,000 ஆகும்; அப்பெரும் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு, நிர்வாக ஒப்புதல் பெருமலே செலவழிக்கப்பட்டிருக்கிறது."

—என்று, 1951—52-ம் ஆண்டுக் கணக்கை ஆராய்ந்து கூறிய பொதுக் கணக்குத் தணிக்கைக் குழு கண்டுபிடித்து எடுத்துக் காட்டியிருக்கிறது.

தணிக்கைக் குழு அறிக்கை அடுத்த கிழமையில் பம்பாய் சட்டசபையில் விவாதிக்கப்பட இருக்கிறது.

பம்பாய் மனை நிர்மாணக் குழுவினால் கட்டிமுடிக்கப்பட்ட மனைகளின் வாடகை விவகாரம். அக் கட்டிடங்களுக்குச் செலவிடப்பட்ட செலவினங்கள் அனைத்தையும் ஈடுசெய்யக்கூடிய வகையில் நிச்சயிக்கப்பட்டதாக இல்லை; வாடகை விவகாரத்தை இலாபகரமான முறையில் திருத்தி அமைக்க உடனடியாக முயற்சிக்குமாறு குழு கோரி இருக்கிறது.

அம்மனைகள் அனைத்திற்கும் இலாபகரமான வாடகை விகிதத்தை முதற்கண் நிர்ணயித்தும், பின்னர், அவ் வாடகையைக் கொடுக்க முடியாதவர்களுக்கு உதவித் தொகை அளிப்பது பற்றி நிச்சயிக்கும்படியும் குழு பரிகாரம் கூறி இருக்கிறது.

மாவட்டங்களுக்கு வேர்க்கடலை வினியோகித்த வகையில் 48 லட்ச ரூபாய் வசூலிக்கப்படாமலேயே இருந்து வருகிறது. அத்தொகையில் 12 லட்ச ரூபாய் வரையில் வசூலிக்கப்பட்டும் இருக்கிறது.

அப்படி வசூலிக்கப்பட்ட தொகையை உடனுக்குடன் மாவட்ட அதிகாரிகள் அரசாங்கத்திற்கு அறிவிக்காமல் விட்டுவிட்டிருக்கின்றனர். கடித மூலமாகவும், தந்தி மூலமாகவும் அடிக்கடி நினைவுறுத்தியும்கூட, மாவட்ட அதிகாரிகள் அலட்சிய [illegible] போக்குக் குறித்து குழு கண்டனம் தெரிவித்திருப்பதுடன், தொடர்புடைய அதிகாரிகள் மீது தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படியும் சிபாரிசு செய்திருக்கிறது

முன்கூட்டி ஒப்பந்தப் புள்ளி கோராமலே பணிபுரிய குறிப்பிட்டவர்களுக்கு அனுமதி கொடுப்பது, ஒவ்வொரு ஆண்டும் நடைபெற்று வருவதாக பம்பாய் அரசாங்கத்தை, குழு கண்டித்திருக்கிறது.

குறிப்பிட்ட ஒரு திட்டத்திற்குத் தேவைப்படும் மொத்தச் செலவுத் தொகையை வரையறுக்காமல் திட்டத்தைத் தொடங்கித் திண்டாடுவதை பம்பாய் அரசாங்கம் வழக்கமாகக் கொண்டிருக்கிறது எனவும் பொது கணக்குத் தணிக்கைக் குழு எடுத்துக்காட்டி இருக்கிறது இதற்கு எடுத்துக்காட்டாக கக்ர பாரா திட்டத்தைச் சுட்டி இருக்கிறது.

அந்நிய மொழிகளில் இந்திய இலக்கியங்கள்

'யுனெஸ்கோ' திட்டத்தின் கீழ் 9 இந்தியஇலக்கியங்கள் ஐரோப்பிய மொழிகளில் மொழி பெயர்க்கப்பட இருப்பதாகவும், இவற்றில் சிலப்பதிகாரத்தை பிரெஞ்சிலும், கம்ப இராமாயணத்தை ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்படுமென்றும் இராஜ்யங்கள் சபையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

4-வது உருக்கு ஆலை உருவாக பிரான்சும் உதவுமா?

முன்னர் தீட்டிய திட்டங்களுடன் இந்தியா இவ்வுதவியை ஏற்குமா?

கல்கத்தா, செப். 1—

பிரெஞ்சு உருக்குத் தொழிலில் ஈடுபட்டிருப்போர், இந்தியாவில் ஒரு உருக்குத் தொழிற்சாலை அமைத்துத் தருவதற்குத் தயாராக இருப்பதாக அறிவித்திருக்கின்றனர்.

இரண்டாவது திட்டக் காலத்தில் ஏற்கனவே ஜெர்மனி, ரஷ்யா பிரிட்டன் ஆகிய நாடுகளின் உதவியைக் கொண்டு மூன்று உருக்கு ஆலைகளை அமைக்க இந்திய சர்க்காரால் திட்டமிடப்பட்டு விட்டதால், பிரெஞ்சு உதவியை ஏற்றுக்கொள்வது தாமதமாகக் கூடுமெனக் கருதப்படுகிறதாம்.

சுமார் ரூ. 35 கோடி செலவில், 7 லட்சம் டன் உருக்கு இறக்குமதி செய்ய திட்டமிடப்பட்டிருக்கிறது

மதுவிலக்கு விதியை மீறும் மத்திய சர்க்கார் ஊழியர்

தகுந்த நடவடிக்கை எடுக்க மாநில சர்க்காருக்கு அதிகாரம்

புனா, செப். 1—

மதுவிலக்கு விதியை மீறும் மத்திய சர்க்கார் ஊழியர்கள் மீது கூட 'தகுந்த நடவடிக்கை' எடுக்க, பம்பாய் மாநில சர்க்காருக்கு அதிகாரம் வேண்டும் என்ற மாநில மதுவிலக்கு 'போர்டு' யோசனையை இந்தியப் பேராசு ஏற்றுக்கொண்டு விட்டதாகத் தெரிகிறது.

இந்தத் தகவலை, பம்பாய் மாநில மதுவிலக்கு மந்திரி டாக்டர் ஜிவராஜ் மேத்தா, மாநில மதுவிலக்கு 'போர்டு' கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தி இடிபடுகிறது?

புனா, ஆக. 31—

'சர்க்கார் கல்லூரிகளில் போதனை மொழியாக இந்தி புகுத்தப்படமாட்டாது,"

என்று, பம்பாய் கல்வி மந்திரி தினகர ராவ் தேசாய் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

சர்தார் வல்லபாய் பட்டேலின் பெயரால் துவங்கப்படும் பல்கலைக் கழகம் ஒன்றிற்கான மசோதாவினை சபையில் தாக்கல் செய்த போது இந்த உறுதிமொழியை அவர் தந்திருக்கிறார்.

அந்தப் பல்கலைக் கழகத்தின் போதனை மொழி, தேவநாகிரி லிபியுடன் இந்தி மொழியாக இருக்கும் என்றும் கூறப்படுகிறது.

நிதிமந்திரி தேஷ்முக் வெளியேற்றம்?

'கம்பெனி' மசோதாவை ஒட்டி கருத்து வேறுபாடு

இந்தியப் பிரதமர் நேருவின் 'சமரசம்'

புதுடில்லி, செப். 1—

கம்பெனி மசோதாவின் சில விதிகள் பற்றி நிதி மந்திரி தேஷ்முக் அவர்களுக்கும், மக்கள் சபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்களுக்குமிடையே பலத்த கருத்துவேறுபாடு நிலவியிருக்கிறது.

மந்திரிசபையிலிருந்தே தேஷ்முக் விலகிவிடக் கூடும் என்ற அச்சம் நேற்று, பிரதமர் பண்டித நேரு, உள்நாட்டு மந்திரி பந்த் ஆகியோரது தலையீட்டினால் நீக்கப்பட்டிருக்கிறது.

'மானேஜிங் ஏஜெண்டுகள்', செயலாளர்கள், பொருளாளர்கள் ஆகியோரது மொத்த ஊதியங்கள் சம்பந்தமாகக் கூட்டுப் பரிசீலனைக் குழுவின் சிபாரிசுகளின்படி, மசோதாவில் இடம் பெற்றுள்ள விதிகள் அப்படியே இருந்து வருவது என்ற முறையில் 'சிக்கல்' தவிர்க்கப்பட்டிருக்கிறதாம்.

இந்த ஊதியம் பற்றிய விவாதத்தில், தான் பல முறை விளக்கம் தந்தும், காங்கிரஸ் உறுப்பினர்கள் புதிய புதிய திருத்தங்களைக்கொண்டுவந்து, மக்கள் சபையிலேயே தம்மைத் தாக்க முற்படுவதாகவும், எனவே இந்தக் கம்பெனிகள் மசோதாவை நிறைவேற்றும் பொறுப்பை தாம் ஏற்க முடியாது என்றும் நிதி மந்திரி தேஷ்முக் பிரதமருக்குக் கடிதம் எழுதினாராம்.

திருத்தங்கள் பற்றி தினம் தினம்—கடந்த 10 நாட்களாக ஒரு தனிக் குழு விவாதித்து வருவதாகவும், அந்தக் குழுவினருக்கு, தனது கொள்கையை மீண்டும் மீண்டும் விளக்கிச் சொல்லியும், அவர்கள், புதுப் புதுத் திருத்தங்களைக் கொண்டு வருவதாகவும், இதனால் ஒருமுறை அந்தக் குழுவிலிருந்து நிதி மந்திரி தேஷ்முக் வெளியேறிவிட்டதாகவும் தெரியவருகிறது.

இரண்டாம் திட்டத்திற்காக ரூபாய் 800 கோடி வரி விதிப்பாம்

"பொது சேமிப்பில் குறிப்பிடத் தகுந்த அதிகரிப்பு ஏற்பட்டாலன்றி, பொருளாதார அபிவிருத்தி பெரும் அளவு ஏற்படுவது சாத்தியமில்லை என்பதால், பெரும் வரிச் சுமையை மக்கள் ஏற்றுக் கொள்ளத் தயாராயிருக்க வேண்டும்,"

என்று, திட்ட மந்திரியான குல்ஜாரிலால் நந்தா அகில இந்திய காங்கிரஸ் செயற் குழு உறுப்பினர் கூட்டத்தில் தெரிவித்திருக்கிறார்.

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் குறித்து காங்கிரஸ் உறுப்பினர்கள் விவாதிப்பதற்கு வசதியாக இருக்கும் பொருட்டு அவர் அனுப்பியுள்ள குறிப்பு ஒன்றில், 'இப்போதுள்ள சகல திட்டத்தின் நிதி எல்லையை பூர்த்தி செய்வதற்கே, தேச முழுவதுமான பெரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டாக வேண்டும்;

"இரண்டாம் திட்டத்திற்கான நிதி மதிப்பீட்டில் சுமார் 800 கோடி ரூபாய் துண்டுவிழுகிறது; இந்தப் 'பற்றுக்குறை'யைச் சரிக்கட்டுவதற்காக, தேசிய வருமானத்தின்மீது வரி விதிப்பு ஏழு சதவிகிதமாயிருப்பதை ஒன்பது சதவிகிதமாக உயர்த்த வேண்டியிருக்கும்; என்றாலும் வரிச் சுமையை மக்களிடை சரியான அளவில் பங்கிட வேண்டும்,"

என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொழிலாளியின் கண்ணியம்!

பம்பாய், செப். 1—

பம்பாய் 'பெஸ்ட்' பஸ் நிறுவனத்தில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி பஸ் ஒன்றில் தான் கண்ட ரூ 700 கொண்ட பண முடிப்பை அலுவலகத்தில் சேர்த்து, தனது கண்ணியத்தை வெளிப்படுத்தியிருக்கிறார்.

அந்த பணப்பை, அதன் சொந்தக்காரரான ஒரு பிரெஞ்சு புகைப்படக்காரரிடம் மறுநாள் சேர்க்கப்பட்டிருக்கிறது.

சில வாரங்களுக்கு முன், பஸ் ஒன்றில் கிடைத்த ரூ. 14,000 பெறுமான வைர நகை ஒன்றை அதே நிறுவனத்தைச் சேர்ந்த ஒரு 'கண்டக்டர்' கண்டெடுத்து உரியவரிடம் முறைப்படி சேர்த்தது நினைவிலிருக்கலாம்.

பண்டித நேருவுக்கு ஜப்பான் அழைப்பு!

டோக்கியோ, செப். 1—

இந்தியப் பிரதமர் நேருவை ஜப்பான் வெளிவிவகார மந்திரி ஷிகெமிட்சு ஜப்பான் வருமாறு அழைத்திருக்கிறார்.

அவரது அழைப்பிதழுடன், ஜப்பான் மக்கள் சபை உறுப்பினர் நாதக் குழு வரும் செப்டம்பர் இரண்டாவது கிழமையில் இந்தியா வருகிறது.

மேலும், ஜப்பான் வெளிவிவகார இலாகா மந்திரி ஷிகெமிட்சுவும் இந்தியா வருமாறு அழைக்கப்பட்டிருக்கிறார் என்றும், அடுத்த ஆண்டு அவர் வரக்கூடும் என்றும் கூறப்படுகிறது.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 2—9—'55 வெள்ளி

பேரரசின் ஓரவஞ்சனை!

இந்தியத் துணைக்கண்டம் அரசியல் விடுதலை பெறுவதற்கு முன்பே, தொழில் துறையில் தென்னாடு பின்தங்கிக் கிடக்கிறது. அதன் விளைவாக வாழவகையற்றுப்போன பல்லாயிரக்கணக்கானவர், வயிற்றுப் பிழைப்பை ஒன்றையே குறியாகக்கொண்டு கடல் கடந்து, வெகு தொலைவுக்குக் குடியேறியும் உள்ளனர். அதுபோன்றே உள்நாட்டிற்குள்ளாகவே தொழில் வளமிகுந்த பகுதிகளுக்கு இடம் பெயர்ந்து சென்றுமுள்ளனர். இன்றும் இந்தப் பயணம் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

வெளி நாடுகளுக்கும், உள்நாட்டிலும் குடியேறிப்போனவர்கள் போக, இங்குள்ளவர்களும் சாதாரண வாழ்வு நடத்துவதற்கும் முடியாத நிலைதான் இப்பொழுதும் இருந்துவருகிறது. இன்றும் வறுமையிலும் வாட்டத்திலும்தான் தென்னகத்தார் தள்ளப்பட்டுத் தவித்துக்கொண்டு இருக்கின்றனர்.

பஞ்சத்திற்கும் பட்டினிக்கும் திராவிடத்தார் பலியாகி வருகின்றனர்; இல்லாமைக்கும் ஏழ்மைக்கும் அவர்கள் அல்லல்பட்டு வருகின்றனர்.

மக்களாகப் பிறந்தவர் மக்களாக வாழ முடியவில்லை. மக்கள் உருவில் உலாவும் மாக்கள் போல் 'கிடைத்தால் புசித்து' நொந்த வாழ்வு வாழ்ந்து வெகு வேகமாக நசித்து வருகின்றனர்.

இம்மிருக நிலையைப் போக்கப் பெரு முயற்சி தேவை. இந்த அவல வாழ்வை அகற்றி நல்வாழ்வளிக்க திராவிடம் தொழில் வளத்தில் தீவிரமாக முன்னேறியாக வேண்டும்.

மேற்குறித்துள்ள எதையும் மறுத்துக்கூறும் காங்கிரஸ் கட்சியினர் ஒருவர்கூட இல்லை. அவை அனைத்தும் நியாயம் என்றே பொருள் அறிவு படைத்த எவரும் ஒப்புக்கொள்ளுகின்றனர்.

இந்தியத் துணைக்கண்டத்தில் தொழில் வளத்தில் கடந்த ஐம்பது ஆண்டுகளாக முன்னேறியுள்ள பகுதிகளுடன், அதே ஆண்டு கால அளவில் பின்தங்கிக்கிடக்கின்ற தென்னகமும் சம நிறைவு பெற்றாக வேண்டும். இக்குறிக்கோளையும் நியாயமானது என்றே எவரும் ஒப்புவர்.

கடந்த ஐம்பது ஆண்டுக் காலமாக முன்னேற்றம் அடைந்துள்ள பகுதிகளுடன், பின்தங்கிக் கிடக்கின்ற பகுதியும் சமத்துவ நிலையை அடைய வேண்டுமானால், இந்தியப் பேரரசு செய்ய வேண்டியது என்ன? முன்னேற்றம் பெற்றுள்ள பகுதிகளில் புதப் புதுத் தொழில்களை நிர்மாணிப்பதை சிறிதுகாலம் நிறுத்தி வைத்து, அவ்வகையில் செலவாகும் பணத்தையும், முயற்சியையும், ஆண்டுக்கணக்கில் பின்தங்கிக் கிடக்கின்ற பகுதியின் தொழில் வளத்திற்கு உடனடியாகச் செலவிட முன்வர வேண்டும்; அதுவே நியாயம்; அதுவே முறை. அதனைக் குறைகூறுவோர் நியாய புத்தி படைத்தவர்களாக இருக்க முடியாது.

ஏற்கனவே தொழில் துறையில் முன்னேறியுள்ள பகுதிகளில் பலவகைப் புதுத் தொழில்களைக் காண்பதைக் கொஞ்ச காலத்துக்கு நிறுத்தி வைத்து, பல ஆண்டுக்காலமாக தேய்ந்து கிடக்கிற எம் பகுதியில் தொழில் பெருக முயற்சியுங்கள்—என, திராவிடம் கேட்க முனைந்தால், அதை திராவிடத்தின் உரிமைக் குரலாகத்தான் கொள்ள முடியுமேயல்லாது, அதை, 'அழுக்காறு மனப்போக்கு' என எவராலும் குறைகூற முடியாது. அவ்வுரிமைப் போக்கை திராவிடம் இதுவரை பின்பற்றவும் இல்லை.

தொழில் வளம் பெற்றுள்ள பகுதிகளின் வளப் பெருக்க முயற்சியைத் தள்ளிப்போட்டு, அம்முயற்சியை தொழில் வளமே அறியாத தென்னாட்டில் செலுத்த வேண்டியது இந்தியப் பேரரசின் நீங்காக் கடமையாகும். அப்பொழுது தான் இந்தியப் பேரரசின் 'சம நிறைவு' தொழில் கொள்கையில் நாணயமிருக்கிறது எனத் தென்னகத்தார் நம்புவதற்கும் இடமேற்படும்.

அப்பொழுது தென்னகத்தார் பாராட்டுதலை இந்தியப் பேரரசு பெறுவதும் சாத்தியமாகும்.

அத்தகு நம்பிக்கை ஏற்படும் வகையில் இந்தியப் பேரரசு இதுவரை நடந்து கொள்ளவில்லை; சொல்லுக்கும்-செயலுக்கும், மலைக்கும்-மடுவிற்கும் உள்ள வித்தியாசம் இருந்து வருகிறது.

தொழில் வளம் மிகுந்த பகுதிகளில் புதிய வளம் தேட முயற்சிப்பதை அறவே கைவிடவில்லையானாலும், அத்துறையில் செலவிடப்படும் தொகையின் அளவைக் குறைத்து, பின்தங்கிக் கிடக்கின்ற தென்னகத்தின் தொழில் வளத்திற்கு அதிகமாகச் செலவிட முனைகிறதா என்றால், அந்தப் பெருங்குணமும் இந்தியப் பேரரசிடம் மருந்துக்கும் இருக்கவில்லை. தொழில் வளம் மிகுந்த பகுதிகளை மேலும் மேலும் வளமுள்ளதாக்கும் பெரும் பணியினையே அதிதீவிரமாகச் செய்து வருவதில் நாட்டம் கொண்டிருக்கிறது இந்தியப் பேரரசு!

இந்தியப் பேரரசின் இப்போக்கை ஓரவஞ்சனை என்கிறோம். இப்படிக் கூறுபவர்கள் நாம் மட்டும் அல்ல; விஷயமறிந்த தேசீய ஏடுகளும் இதையே கூறிவருகின்றன.

இந்தியப் பேரரசின் இவ்வோரவஞ்சனைப் போக்கை முதல் ஐந்தாண்டுத் திட்டம் உலகறியச் செய்துவிட்டது. இரண்டாவது ஐந்தாண்டுத்திட்டம் அதனை உறுதி செய்வதாக அமைந்திருக்கிறது. முன்னேற்றம் பெற்றுள்ள பகுதிகளைத் தொழில் துறையில் எட்டிப் பிடிப்பதற்கான வகையில் தரப்பட வேண்டிய நியாயமான சலுகையை, தென்னிந்தியாவிற்குத் தானாகத் தர, இந்தியப் பேரரசிற்குத் தாராள புத்தியில்லை. அதைப்போன்றே தொழில் வளம் குன்றிக் கிடக்கும் தென்னகத்திற்குரிய பங்கினை மனமுவந்து கொடுக்கவும் இந்தியப் பேரரசு முன்வரவில்லை. எனவே, இந்தியப் பேரரசின் நல்லெண்ணத்தில் ஏற்கனவே ஏற்பட்டுள்ள சந்தேகம் மேலும் வலிவு பெறுவதற்கே வழி செய்யக்கூடும்.

இரண்டு திட்டங்களும் இந்த உண்மையைத்தான் எடுத்துக் காட்டி நிற்கின்றன.

தினம் 5000 பேர்

யுத்தத்தளவாட தொழிற்சாலையில் வேலையின்றி உள்ளனராம்!

யுத்தத் தளவாடத் தொழிற்சாலைகளில் சுமார் 5,000 பேர் தினமும் வேலையின்றி இருப்பதாக மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யுத்த தளவாட உற்பத்திக்கு தேவைகள் குறைந்ததும், 1953-ம் ஆண்டு முதல இந்த நிலைமை ஏற்பட்டதாகவும் அவர்களை சர்க்கார் இலாகா சிவில் உற்பத்தித் தேவைகளுக்கு உபயோகிக்க முயற்சி எடுக்கப்பட்டு வருவதாகவும், இதனால் அலுவல் இல்லாதிருப்போர் எண்ணிக்கை குறைந்திருப்பதாயும், புதிய நியமனங்கள் செய்யப்படுவதில்லை என்றும், தொழிலாளர்களை சர்க்கார் நடத்தும் தொழிற்சாலைகளில் அமர்த்த முயற்சி நடைபெறுவதாகவும் கூறினர்.

பம்பாய் கல்லூரிகளில் போதனா மொழி

இந்தியை ஏற்றுக்கொள்ள முடிவு

பம்பாய், ஆக 31—

பம்பாய் பல்கலைக் கழக துணை வேந்தர் நியமித்த போதனா மொழிக் குழுவில் பெரும்பான்மையினர், 'இந்தி மொழியையே பம்பாய் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த கல்லூரிகளில் போதனா மொழியாக ஆக்குவது' என்று முடிவு செய்திருக்கின்றனராம்.

குழுவின் அறிக்கை செப்டம்பர் 3-ந் தேதியன்று பூர்த்தியாகுமாம்.

மேலும், பணித் தேர்வுக் குழு நடத்தும் போட்டிப் பரீட்சைகள் அனைத்தும் இந்தியிலேயே இருக்க வேண்டும் என்றும் குழு சிபாரிசு செய்திருப்பதாகத் தெரிகிறது.

போதனா மொழியில், இந்த மாற்றம், வரும் 1965-க்குள் அமுல் செய்யப்பட வேண்டும் என்றும் குழு தெரிவித்திருக்கிறதாம்.

சரணடைய நாகர்கள் மறுப்பு

ஷில்லாங், ஆக. 31—

வடகிழக்கு எல்லைப்புற ஏஜென்சி விடுத்திருந்த உத்தரவுகளையும் மீறி, இராணுவத்திடம் சரண் அடைய சுமார் 500 'ஆயுதந்தரித்த' நாகர்கள் மறுத்து வருவதாகச் செய்தி கிடைத்திருக்கிறது

சென்னை டாக்டர் திரிபுரசுந்தரி

ஆப்பிரிக்காசென்று கணவருடன் வாழ அனுமதி பெறுகிறார்

கடந்த மூன்றாண்டு காலத்தில் முதன் முதலாக, தென் ஆப்பிரிக்க சர்க்கார், ஒரு தென்ஆப்பிரிக்க இந்தியர் அவரது மனைவியை இந்தியாவிலிருந்து ஆப்பிரிக்காவிற்கு அழைத்துக்கொள்வதற்கு அனுமதி தந்திருக்கிறது.

திரு. கே. என். பிள்ளை என்பவரை மணந்துகொண்டிருக்கும் டாக்டர் திரிபுரசுந்தரி என்ற அம்மையாருக்கு, ஆப்பிரிக்காவில் தன்னுடைய கணவருடன் சென்று வாழ அனுமதி கிடைத்திருப்பதாகத் தெரிகிறது.

இந்த மனைவியின் மருத்துவப் படிப்புத்தான், அவருக்கு, கணவனுடன் ஆப்பிரிக்காவிற்குச்சென்று வாழும் வாய்ப்பை உண்டுபண்ணியிருப்பதாகக் கூறப்படுகிறது.

'நவ இந்தியா' பேசுகிறது

தமிழ் நாட்டை எடுத்துக்கொண்டால், சேலம், தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு, மதுரை, இராமநாதபுரம், கோவை போன்ற மாவட்டங்களை 'வறட்சி மாவட்டங்கள்' என்று அழைப்பதுண்டு; பாலைவனச் சோலையைப் போன்று, இந்த வறட்சியிலும் ஆங்காங்கு சிறிது பசுமையைக் காணலாம்; திருநெல்வேலி மாவட்டத்தை 'அரைகுறை வறட்சி' என்று சொல்லுவார்கள்; திருச்சியும் இந்த ரகத்திற்கு சிறிது மேற்பட்டது; தஞ்சை ஒன்று தான் தென்னகத்தின் நெற்களஞ்சியம்.

★

சுயநலம் பற்றிய விஷயமும் தெற்கில் உள்ளவர்களுக்கு சுலபத்தில் புரிவதில்லை; 'யார் ஆண்டால் என்ன? கோவிலும், குளமும் சரியாக இருந்தால் போதும்' என்று நினைக்கும் கூட்டம்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் பற்றிய பேச்சு எழும்போது தான், 'முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டுக்கு உரிய பங்கு கிடைக்கவில்லை' என்ற உண்மையும் தெரிந்தது. இனி, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்போது, 'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தென்னாட்டைப் புறக்கணித்துவிட்டார்கள்,' என்று நினைத்துப் பார்ப்பதில் பலன் எதுவுமில்லை உரிய பங்கு வேண்டுமென்ற நினைப்பு இப்போதே ஏற்பட்டுவிட்டது; இது ஒரு நல்ல அறிகுறி.

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஐந்து கோடி ரூபாயிக்கு மேல் செலவான பெரிய நீர்ப்பாசனத் திட்டங்கள் வடக்கிலேதான் உள்ளன; வடக்கில் உள்ள சில திட்டங்களுக்கு ரு. 70 கோடி, ரூ. 100 கோடி, 150 கோடி —என்றெல்லாம், செலவுத் தொகை மதிப்பிடப்பட்டுள்ளன.

★

முதலாவது ஐந்து ஆண்டுத் திட்டத்தில், நீர்ப்பாசன திட்டங்களின் நிலைமையைப் பாருங்கள்:—

1. நந்திகொண்டா
2. கோசி
3. காக்ராபர்
4. ஹரிகே
5. துங்கபத்திரா
6. டி. வி. சி.
7. சோய்னு
8. ஹிராகுட்
9. பக்ரா-நங்கல்
10. ரீகண்ட்
11. மயூராட்சி
12. சாம்பால்
13. பத்ரா
14. கட்டபிரபா
15. தூத்வா
16. கீழ்பவானி
17. மச்கந்த்
18. சாரதா
19. ஜோக்
20. மாஹி
21. காந்திசாகர்

இவையெல்லாம் ரூபாய் ஐந்து கோடிக்குமேல் செலவு செய்து கட்டப்படும் அணைக்கட்டுகள்; ஏற்கனவே பல பூர்த்தியாகியும் விட்டன; தமிழ் நாட்டில், இந்த ரகத்தில் கீழ்பவானித் திட்டம் ஒன்று தான் காணப்படுகிறது.

இதற்காக மத்திய சர்க்காரைக் குறை சொல்லவும் முடியாது; மீறிக் கேட்டால், 'தமிழ் நாட்டில் பெரிய நதிகள் இல்லை என்கிறார்கள்; இது உண்மையும்கூட! வடக்கே பெரிய நதிகளும் உள்ளன; பெரிய அணைக்கட்டுகளையும் கட்டுகிறார்கள்.

★

பெரிய நதிகள் உள்ள பகுதியில் விவசாயம்தான் பிரதானமானது; முதலாவது ஐந்தாண்டுத் திட்டம் நீர்ப்பாசன வசதியை அடிப்படையாகக் கொண்டது; ஆகவே, வடக்கே பெரிய அணைக்கட்டுகள் ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை; இது ஓரளவுக்கு நியாயமும்கூட!

'இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் வளர்ச்சி தான் அடிப்படையான அம்சம்' என்கிறார்கள்; தொழில் வளர்ச்சி எங்கு ஏற்பட வேண்டும்?

பாசன வசதி இல்லாமல் உள்ள வறட்சிப் பிரதேசங்களில் தொழில் வளர்ச்சி ஏற்பட வேண்டும்; அப்போதுதான், அங்குள்ள மக்களுக்கு வாழ வகை ஏற்படும். இந்த ரீதியில் பார்க்கப்போனால், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கணிசமான தொழில் அபிவிருத்தி தெற்கே ஏற்பட வேண்டும்.

'இரும்பும், நிலக்கரியும் வடக்கே கிடைக்கிறது; ஆகவே, பெரிய தொழில்களை அங்கு ஆரம்பிப்பது தான் இலாபகரமானது,' என்று வாதிப்பது பொருந்தாது. சர்க்கார், மக்களின் நலனையும், பிரதேச நலனையும்தான் முக்கியமாகக் கவனிக்க வேண்டும்.

விவசாய செழிப்பு—தொழில் செழிப்பு ஒரு பக்கம்; மறுபக்கம், விவசாய வறட்சி—தொழில் வறட்சி என்ற நிலைமை கூடாது. இரண்டையும் சரிக்கட்டி சம நிலைக்கொள்கையை ஏற்படுத்துவதுதான் சேம நல சர்க்காரின் இலட்சியமாக விளங்கவேண்டும்

இந்த ரீதியில் பார்க்கப்போனால் தெற்கில் போதிய அளவு தொழில் அபிவிருத்தி இன்னும் ஏற்படவில்லை.

★

ஐம்பது கோடி ரூபாய் செலவில் மின்சார சாதன உற்பத்தித் தொழிற்சாலையொன்று தெற்கில் ஆரம்பிக்க வேண்டுமென்று ஆரம்ப முதல் வற்புறுத்தி வருகிறார்கள்; டில்லி சென்ற மந்திரிகளும் வற்புறுத்தினார்கள்; டில்லியில் உள்ள தமிழ் நாட்டு பார்லிமெண்ட் உறுப்பினர்களும் அடிக்கடி வற்புறுத்தி வந்தார்கள்.

இத்தகைய தொழிற்சாலை தெற்கில் ஆரம்பிப்பதற்கு விசேட சூழ்நிலையும், உரிமையும் உண்டு. கிராமங்களுக்கு மின்சார வசதி செய்து கொடுப்பதில் மைசூர்தான் இந்தியாவிலேயே முதன்மை ஸ்தானம் வகித்து வந்தது; இப்போது மைசூரையும் சென்னை மாநிலம் மிஞ்சிவிட்டது; இந்தியாவிலேயே, சென்னை மாநிலத்தில்தான் அதிக கிராமங்களில் மின்சார வசதி ஏற்பட்டுள்ளது.

ஆகவே மின்சார வசதி பரவியுள்ள மாநிலத்தில் மின்சார சாதனங்களின் தேவையும் அதிகமாக இருக்கும். இத்தகைய சாதனங்களின் உற்பத்திசாலை சென்னை மாநிலத்தில் அமைவதுதான் பொருத்தமானது.

இத்தொழிற்சாலையை மூன்று பிரிவாகப் பிரித்து, ஒரு பிரிவை மட்டும் சென்னை மாநிலத்தில் வைக்கப் போகிறார்களாம்; எதற்கு இந்தப் பிரிவினை என்பதுதான் தெரியவில்லை தெற்கிலே பிளவு மனப்பான்மை அதிகம் என்கிறார்கள்.

தொழில் விவகாரத்தில் அவசியமற்ற பிரிவுக்கொள்கை இருக்குமானால் பிறகு மனப்பான்மை மேலும் அதிகரித்துவிடும்.

(இவ்வாறு, 31—8—55 'நவ இந்தியா' இதழில், யு. ஆர் என்பவர் எழுதியுள்ளார்.)

சென்னைமாநிலத்தில்கம்பளம் பதனிடும் நிலையம்

பெங்களூர், ஆக 31—

சென்னை மாநிலத்தில் ஜோலார்பேட்டை அருகில் விண்ணமங்கலம் எனும் இடத்தில் சுமார் ரூ 4.21 இலட்சம் செலவில் கம்பளம் பதனிடும் நிலையம் ஒன்றைத் துவக்கலாம் என்று சென்னை மைசூர் மாநில கம்பள 'போர்டு' தீர்மானித்திருக்கிறதாம்.

தென்னாற்காடு மாவட்டத்தில் அண்ணா சுற்றுப்பயணம்

மாநில மாநாட்டு நிதிக்கு ரூ. 1,001

சிறப்புச் சொற்பொழிவுக் கூட்டம்

28—8—55 காலை 10 மணிக்கு, கடலூர் (என். டி.) நியூ சினிமா தியேட்டரில் தி. மு. கழகச் சார்பில், தோழர் எஸ். சிவப்பிரகாசம் தலைமையில் சிறப்புச் சொற்பொழிவுக்கூட்டம் நடைபெற்றது.

தலைவர் தமது முன்னுரையில் தி மு. கழகக் கொள்கைகளை விளக்கி விரிவுரையாற்றினார்.

பின்னர், தோழர்கள் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ, அ. பொன்னம்பலனார், எஸ் முத்து ஆகியோர் சமூக—அரசியல்—பொருளாதார விடுதலை குறித்தும், ஐந்தாண்டுத் திட்டங்களின் மூலம் திராவிட நாடு—தென்னாடு புறக்கணிக்கப்பட்டு வருவதையும், வடவர் ஆதிக்கம், வடவர் சுரண்டல், கட்டாய இந்தியை மறைமுகமாகப் புகுத்தும் திட்டம் பற்றியும், மதம்—கடவுள்—புராணம் ஆகியவைகளின் பெயரால் மக்கள் பொருளையும் அறிவையும் இழக்காமல், 'ஒன்றே குலம்—ஒருவனே தேவன்' என்ற உயர்ந்த நெறியைக் கடைப்பிடித்து, பிளவுகள் நீக்கி, ஒன்றுபட்ட சமூகமாக வாழ வேண்டுமென்றும் குறிப்பிட்டுப் பேசினர்.

மாநில மாநாட்டு நிதி அளிப்பு

தென்னாற்காடு மாவட்டச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் அவர்கள், அண்ணா அவர்களிடம் மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 1 001 கொடுத்தார்.

வரவேற்பு

நகர திராவிட முன்னேற்றக் கழகம், மாணவர் திராவிட முன்னேற்றக் கழகம், புதுப்பாளையம் தி. மு கழகக் கிளை, ஆகிய பல்வேறு கிளைகள் சார்பில் அண்ணா அவர்கட்கு மலர் மாலைகளும், காலணா முடிப்புகள் இரண்டும், கைத்தறி ஆடைகளும் வழங்கப்பட்டன; வரவேற்பு மடல்களும் படித்துக் கொடுக்கப்பட்டது. இந்நிகழ்ச்சிக்கு உள்ளூர், வெளியூர் தோழர்கள் பெருந்திரளாக வந்திருந்தனர்.

இறுதியாக அண்ணா அவர்கள் திருச்சி மாநில மாநாட்டுக்கு நிதி உதவிய தோழர்களைப் பாராட்டியும், எல்லா மக்களையும் திருச்சி மாநில மாநாட்டுக்கு வரும்படியும் கேட்டுக்கொண்டார்.

மேலும் அண்ணா அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டார்:—

"காங்கிரஸ் ஆட்சியில் பொது மக்களின் வறுமை நிலை நீங்கிய தாகக் காணோம்; பஞ்சமும், பட்டினியும், வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழியவில்லை; விவசாயிகளும், நெசவு, ஆலைத் தொழிலாளர்களும், வியாபாரிகளும் பொது மக்களும் வாழ முடியாமல் வதைகின்றனர்; அடக்குமுறைக் கொடுமைகளும், அதிக வரி கொடுக்கும் இன்னல்களும்தான் அதிகரித்துள்ளது; அடக்குமுறை, சிறைச்சாலை துப்பாக்கி ஆகியவைகளை நம்பி, மக்கள் குரலை—மக்கள் உரிமையை மதியாமல் வடவர் ஆதிக்கத்தை வளம் பெறச் செய்ய இங்கு இரட்டை ஆட்சி முறை நடைபெற்று வருகிறது; வடவர் சுரண்டல் முறை நீடிக்க வளமார் திராவிடத்தை வியாபாரச் சந்தையாக்கி விட்டனர்; வடநாட்டு ஆலை அரசர்களும், வணிக முதலாளிகளும் திட்டம் தீட்டி, தென்னாட்டை கொள்ளையடித்து வருகின்றனர்; இந்த நிலை மாறுவதற்கு நாம் போராடி வருகிறோம்; சமுதாய இழிவு நீங்க, அரசியல் அடிமைத்தனம் ஒழிய, திராவிட நாடு தனிக் குடியரசாக மலர, பொருளாதாரப் பேதம் நீங்க, 'ஆண்டான்—அடிமை' 'முதலாளி—தொழிலாளி' என்ற முறை ஒழிய, நாட்டிலே நாம் தொடர்ந்து பணியாற்றுவோம்.

"தேர்தல் மோகம், மந்திரி பதவி பெறும் தந்திரம், சட்டசபைக்கு இடம் பிடித்தல் போன்றவைகள் மட்டுமே 'தேசத் தொண்டு' என்று கருதாமல், வடவர் பிடியிலிருந்து திராவிடம் மீட்கப்பட்டு சமதர்மக் குடியரசு ஏற்பட—நாடு விடுதலை பெற—மாற்றுக் கட்சியிலுள்ள தோழர்களை—நல்லெண்ணம் கொண்டவர்களை—தியாகத் தழும்புகளுடன், துன்பங்களை ஏற்றுக் கொண்ட உறுதி உள்ளம் கொண்டவர்களை எல்லாம் எங்களுடன் சேர்ந்து பணியாற்றும்படி அழைக்கிறேன்.

"மாணவர்கள் உலக அறிஞர்களின் வரலாற்றை நாட்டு மக்களுக்கு எடுத்துக் கூறி, அவர்களின் அறிவு வளர்ச்சிக்குப் பணியாற்ற வேண்டுமாறு கோருகிறேன்.

"மதம்—கடவுள்—புராணப் புரட்டுக்களை விளக்கி, ஆபாசக் கற்பனைகளைச் சுட்டிக்காட்டி, அப்புரட்டுகளையும், பொய்யுரைகளையும் அகற்றிவிட்டு, உண்மை நெறிகளைக் கடைப்பிடிக்கும்படி நாட்டு மக்களை நாம் கேட்டுக்கொள்கிறோமே தவிர, அவைகளிலுள்ள சிலபல பண்பாடுகளை அழித்துவிட வேண்டுமென்று நாம் கூறிவந்ததில்லை; மாறாக, அவைகளின் பேரால் புரட்டுத்தனமான முறையில் மக்களை ஏய்த்துவரும் சுயநலக்காரர்களின் புரட்டுகளை அம்பலமாக்குகிறோம். மூடப் பழக்க வழக்கங்களின் பிடிப்பிலிருந்து விலகுமாறு மக்களை கேட்டுக் கொள்ளுகிறோம்."

தெ. ஆற்காடு மாவட்டகுழு

அன்று பிற்பகல் 3½ மணிக்கு, தென்னாற்காடு மாவட்டக் குழு உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. பொதுக் குழு உறுப்பினராக தோழர் வாணிதாசன் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். புது கிளைகள் நிறுவியதை ஒப்புக்கொண்டும், மற்றும் சில முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

பின்னர், அண்ணா அவர்கள், கழகத் தோழர்கள் ஒன்றுபட்டுப் பணியாற்றியமைக்குப் பாராட்டுதல் தெரிவித்தும், தி. மு. கழகத்தின் எதிர்கால வேலைத் திட்டங்களுக்கு ஆக்கம் தரும்படியும், மாநில மாநாட்டுக்கு நல்லபல திட்டங்களைத் தீட்டி உதவும்படியும் கேட்டுக் கொண்டார்.

★

நெல்லிக்குப்பம்:

ஊராண்மைக் கழகம் வரவேற்பு

28—8—55 மாலை 5½ மணிக்கு நெல்லிக்குப்பம் ஊராண்மைக் கழகத்தார், ஊராண்மைக் கழகக் கட்டிடத்தில், திரு ஜனாப் முகம்மது அமீது தலைமையில் அண்ணா அவர்கட்கு வரவேற்பு, வாழ்த்து மடல் படித்துக் கொடுத்து, மலர் மாலைகள் சூட்டினர்.

அண்ணா அவர்கள் வரவேற்புக்குப் பதில் அளிக்கும் முகத்தான் சொற்பொழிவாற்றுகையில், "ஊராண்மைக் கழகத்தார்—மக்கள் நல்லறிவு பெற, உலக வரலாற்றை அறிய நூல் நிலையங்கள் நிறுவி, இல்லங்கள் தோறும் நல்ல நூற்களைக் கொடுத்து மக்கட்கு அறிவைப் பரப்புவதுடன், ஊர் மக்கட்கு வேண்டிய குடிதண்ணீர் வசதி, மருத்துவ வசதி, சுகாதார வசதி, நல்ல சாலைகள், மின்சார விளக்கு வசதிகள் ஆகியவற்றை ஏற்படுத்துவதுடன், மக்கள் நலத்தில் கவலை செலுத்தி அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு முயல வேண்டும்," என்று குறிப்பிட்டார்.

பொதுக்கூட்டத்தில் மாநில மாநாட்டுக்கு நிதியளிப்பு

28—8—55 மாலை 7 மணிக்கு நெல்லிக்குப்பம் தி. மு. கழகச் சார்பில், துரோபதை அம்மன் கோவில் முன்பு மாவட்டச் செயலாளர் தோழர் இரா. சாம்பசிவம் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தலைவர் தமது முன்னுரையில், திருச்சி மாநில மாநாடு பற்றியும், தி. மு. கழகக் கொள்கைகளுக்கு ஆதரவு தரும்படியும் கேட்டுக் கொண்டார்.

அதன் பிறகு தோழர்கள் அ. பொன்னம்பலனார், எஸ். முத்து ஆகியோர் திராவிடத்தில் தொழிலாளர்கள் நிலைமைபற்றியும், காங்கிரஸ் ஆட்சியில் மக்கள் படும் துயரம் குறித்தும் சொற்பொழிவாற்றினர்.

அண்ணா அவர்கட்கு பல கிளைகள் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் சூட்டப்பட்டன. நெல்லிக்குப்பம் தி. மு கழகச் சார்பில் மாநில மாநாட்டு நிதிக்கு ரூ. 200; பண்ருட்டி தி. மு. கழகம் ரூ 25; மேல்பட்டம்பாக்கம் தி. மு கழகம் ரூ. 25—ஆக ரூ. 250 அண்ணா அவர்களிடம் தரப்பட்டது.

பின்னர், அண்ணா அவர்கள் திராவிடத்திலுள்ள செல்வங்கள்—வளங்கள்—பாதுகாப்புகள் பற்றியும், திராவிட நாட்டில் மூவேந்தர் வீரத்துடன் அரசாண்ட வரலாற்றை விவரித்தும், அவர்களிடம் தோல்விகண்ட வடவர் இன்று தென்னாட்டு மக்களை அடக்கி ஆட்சி செலுத்துவதைக் குறிப்பிட்டும், பாகிஸ்தான் பிரிவதற்கு ஒப்புதல் தந்த காங்கிரஸ்காரர்கள், 'திராவிட நாடு' பிரிவதை எதிர்ப்பதில் பொருள் இல்லை என்றும் 'திராவிடர்' என்ற சொல்—'திராவிடம்' என்ற சொல், வரலாற்றில்-தாகூர் கவிதையில்—பண்டித நேருவின் கடிதத்தில் இடம் பெற்றிருப்பதைக் காங்கிரஸ்காரர் படிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

"திராவிட மக்களின் உழைப்பு, செல்வம் ஆகியவை வடவரால் சுரண்டப்படுவதை எதிர்த்து, எதிர்காலத்தில் நல்ல அறப்போராட்டங்களை நடத்தி 'திராவிட நாடு திராவிடருக்கே' ஏற்பட்டால்தான் தென்னாடு வளம் பெற முடியும்; வாழ்க்கையில் எல்லா வசதிகளையும், முன்னேற்றங்களையும் திராவிட மக்கள் காண முடியும்—வாழ்க்கை நிலையை உயர்த்திக் கொள்ளமுடியும்."

★

விழுப்புரம்:

முத்தமிழ் மன்றம் திறப்பு விழா

29—8—55 காலை 10 மணிக்கு, தியேட்டரில், தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., தலைமையில் முத்தமிழ் மன்றத் திறப்பு விழா நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப் பின், தோழர்கள் ஆறுமுகனார், குழந்தைவேல், ரெங்கநாதன், எம். எம் அப்துல் வகாப் ஆகியோர் முத்தமிழ் மன்றம் நிறுவுவதின் நோக்கம் பற்றி பேசினர்.

பின்னர் அண்ணா அவர்கள் முத்தமிழ் மன்றத்தைத் திறந்து வைத்து, இயல்—இசை—நாடகம் பற்றியும், தமிழ் மொழி வளர்ச்சிக்குப் பணியாற்றும் ஆர்வம் நாட்டில் எங்கும் வளர்ந்து வருவதைப் பாராட்டியும், அதுபோன்ற மன்றங்கள் தோன்றி மறைந்து போகாமல் வளம்பெற, மக்கட்குப் பயன்

சுதந்திரப் போராட்ட சரிதம் எழுத நியமிக்கப்பட்ட குழு

இந்திய சர்க்காரால் கலைக்கப்படுகிறது

புதுடில்லி, ஆக. 30—

"இந்தியாவின் சுதந்திரப் போராட்ட சரித்திரத்தை எழுதுவதற்காக நிறுவப்பட்ட ஆசிரியர்கள் போர்டு, 1955 இறுதியில் கலைக்கப்படும்."

என்று, கல்வி இலாகா உதவி மந்திரி ராஜ்யங்கள் சபையில் தெரிவித்துவிட்டு மேலும் சொன்னார்:-

"சரித்திரம் எழுதுவது சம்பந்தமாக அதிக முக்கியமான தகவல்களை போர்டு சேகரித்துள்ளது; ஆனால்; செய்வதற்கு சாத்தியமான எல்லா வேலைகளையும் அது செய்து விட்டதாகவும், இனி இந்த போர்டை நீடிப்பதில் விசேடபடும் வகையில் பணியாற்ற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

★

உளுந்தூர்பேட்டை:

பெயர் சூட்டல்

29—8—55 மாலை 4 மணிக்கு, உளுந்தூர்ப்பேட்டை தோழர் சு. சண்முகம்—தோழியர் இராஜேசுவரி அவர்களின் இரண்டாவது புதல்விக்கு பெயர் சூட்டு விழா நடைபெற்றது.

திரு. சுப்பராயன் மன்றத்தை ஏ கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள் திறந்துவைத்து உரையாற்றினார்கள்.

பின்னர் மாலை நடைபெற்ற பெயர் சூட்டு விழாவில், அண்ணா அவர்கள் தோழர் சு. சண்முகம் அவர்களது புதல்விக்கு 'தேன் தமிழ்' என்று பெயர் சூட்டி, குழந்தையின் பெற்றோர்களின் கொள்கைப் பற்றையும், அவர்களின் அன்பு—ஆர்வத்தையும் பாராட்டினார்.

பெயர் சூட்டு விழாவின்போது, அண்ணா அவர்களிடம் தி. மு. க மாநில மாநாட்டு நிதிக்கு: ரூ. 101 அன்புடன் வழங்கினார்கள்.

அண்ணா அவர்கட்கு வாழ்த்து மடல் ஒன்று உளுந்தூர்ப்பேட்டை தி. மு. கழகத்தாரால் வாசித்தளிக்கப்பட்டது.

★

தியாகதுருகம்:

ஊராண்மைக் கழக வரவேற்பு

29—8—55 மாலை 5 மணிக்கு, தியாகதுருகம் ஊராண்மைக் கழகத்தில், தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ., அவர்கள், தலைமையில், சென்னை முதல் மந்திரி காமராசர் உருவப் படத்தைத் திறந்து வைத்து அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

ஊராண்மைக் கழகத் தலைவர் திரு பி. கே. வி. வெராமன் அவர்கள் நன்றி கூறினார். தேநீர் விருந்தும் நடைபெற்றது.

தி. மு. க. பொதுக்கூட்டம்

29—8—55 மாலை 5½ மணிக்கு, அழகிரி திடலில் திரு. மு. செருராமன் தலைமையில் மாநில மாநாட்டு நிதி அளிப்பு பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அ. பொன்னம்பலனார், ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. ஆகியோரும், அண்ணா அவர்களும் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கிச் சொற்பொழிவாற்றினர்.

பின்னர் தியாகதுருகம் தி. மு. கழகச் சார்பில் மாநில மாநாட்டு நிதிக்காக ரூ. 50 தரப்பட்டது அண்ணா அவர்கட்குப் பல கிளைகள் சார்பில் கைத்தறி ஆடைகளும், மலர்மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

* * *

விழுப்புரம் தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

29—8—55 இரவு 9½ மணிக்கு நகர தி. மு. கழகச் சார்பில், பூங்கா திடலில், தோழர் எல் முத்துராமன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தலைவர் முன்னுரைக்குப் பிறகு தோழர்கள் அ. பொன்னம்பலனார், ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. ஆகியவர்களும், அண்ணா அவர்களும் தி மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், திராவிடத்தின் விடுதலைக்காகத் தீட்டப்படும் இயக்கங்களைக் குறிப்பிட்டும் பேசினர்.

எதிர்கால ஆக்க வேலைக்கு உருவான திட்டங்களைத் தீட்டித் தருவதற்கு திருச்சியில் நடைபெறப் போகும் மாநில மாநாட்டிற்கு எல்லோரும் திரண்டுவர வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டனர்.

அண்ணா அவர்கட்கு, பல கிளைகளின் சார்பில் மலர் மாலைகளும், கைத்தறித் துண்டுகளும் அணிவிக்கப்பட்டன.

பண்ருட்டி, தட்டாஞ்சாவடி ஆகிய கிளைகள் சார்பில் மாநில மாநாட்டுக்கு நிதியாக ரூ. 11—5—0 கொடுக்கப்பட்டது.

(சுதந்திரப் போராட்ட சரிதம் — தொடர்ச்சி)

பலன் எதுவும் இராது என்றும் சர்க்கார் கருதுகிறது."

"போர்டு கலைக்கப்பட்ட பின்பு சேகரிக்கப்பட்ட தகவல்களை என்ன செய்வது என்பதில் சர்க்கார் ஒரு முடிவுக்கு வருவர்; ஆனால், போர்டு 1—12—55க்குள், தனது நிறுவனத்தைக் கலைத்து விடும்படி கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது," என்று, உப-கேள்விக்கு பதிலளிக்கப்பட்டது.

கே: "சேகரிக்கப்பட்ட சில தகவல்களின் அதிகாரபூர்வ உண்மைகள் குறித்து போர்டு உறுப்பினர்களிடையே பெரும் தகராறு ஏற்பட்டது உண்மையா?"

ப: "வாக்குவாதங்கள் எப்போதுமே உண்டு; சரித்திர ஆசிரியர்கள் பொதுவாக ஒருவருக்கொருவர் மாறுபட்ட கருத்து கொள்வது வழக்கமேயாகும்."

"கால அவகாசத்தை நீடிக்கும்படி போர்டு கேட்டிருந்தது. இவ்வாறு செய்தால் பலன் ஏதும் ஏற்பட்டுவிடாது என்பது சர்க்காரின் கருத்து; போர்டு நிறுவப்பட்டபோது, அதுவே சுதந்திரப் போராட்ட சரித்திரத்தையும் எழுத வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டது; ஆனால் தகவல்களை சேகரிப்பதிலேயே போர்டின் காலம் பூராவும் செலவிடப்பட்டது; இந்தத் தகவல்கள் சேகரிப்பதென்பதே மிகப் பெரிய வேலை," என்றும் மந்திரி குறிப்பிட்டார்.

கே: "அப்படியானால் சரித்திரத்தை எழுதுவதற்காக அதற்குக் கால அவகாசத்தை ஏன் நீடிக்கக் கூடாது?"

ப: "தகவல்கள் சேகரிப்பைப் பொறுத்த வரையில், போர்டின் காலத்தை நீடிப்பதில் பலன் இருக்காது என சர்க்கார் கருதுகிறது; போர்டு 1952—53ல் அமைக்கப்பட்டதிலிருந்து இதுவரை ரூ. 3,70,245—4—0 அதற்காகச்செலவிடப்பட்டிருக்கிறது;

மத்திய பிரதேசத்தில்

வெடிமருந்து உற்பத்திசாலை

புதுடில்லி, ஆக. 31—

மத்திய பிரதேசத்தில் உள்ள பந்தாரா மாவட்டத்தில், வெடி மருந்துகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்று நிறுவப்பட இருப்பதாக உதவி பாதுகாப்பு மந்திரி சர்தார் சுர்ஜித்சிங் மஜிதியா தெரிவித்திருக்கிறார்.

விசாரிக்கின்றனராம்!

கடந்த ஆக 15-ம் தேதியன்று சுவாதாவில் மாணவர் கூட்டமொன்றின் மீது போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததை விசாரணை செய்வதென்று பீகார் மந்திரி சபை இன்று முடிவு செய்திருக்கிறதாம்.

‘மூடு விழா’க்கள் போக்கில் ‘மெதுவாகச் செல்லும்’ கொள்கை?

இந்திய சர்க்காரின் கோரிக்கை!

புதுடில்லி, செப். 1—

இந்திய காப்பி ‘போர்டு’ நடத்தும் காப்பி நிலையங்களை மூடுவதில், ‘மெதுவாகச் செல்லும்’ கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு காப்பி போர்டாரை இந்திய சர்க்கார் கேட்டிருக்கின்றனராம்.

ஏனெனில், காப்பி நிலையங்களை மூடுவதினுல் அதில் பணிபுரியும் தொழிலாளர்கள் அவதியுற நேரிடும் என்று சர்க்கார் எடுத்துக் காட்டியிருக்கின்றனராம்.

மேலும் புதிதாகப் பல காப்பி நிலையங்களைத் திறக்கும் வாய்ப்புகளைக் கண்டறியுமாறும் போர்டார் கோரப்பட்டிருக்கின்றனராம்.

இந்த ஆண்டு மார்ச் திங்கள் முடிய 65 காப்பிநிலையங்கள் இந்தியாவிலும், இரு நிலையங்கள் பாகிஸ்தானிலும் திறக்கப்பட்டிருப்பதாக மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டது.

கேள்வி நேரத்தின்போது இந்த தகவல்களைத் தந்த வர்த்தக மந்திரி டி. பி. கார்மார்க்கர், ‘மைசூரிலிருந்த காப்பி நிலையம் மூடப்பட்டதற்குக் காரணம், அது இலாபகரமாக நடைபெறவில்லை; மேலும், வீட்டில் தயார் செய்யும் காப்பியே அங்கு கிடைத்ததைவிட நன்றாக இருந்ததினாலும் மூடப்பட்டது,’ என்று, சிரிப்புக்கிடையே உபகேள்வி ஒன்றுக்கு பதில் தந்திருக்கிறார்.

ஆந்திராவில் ஒரு உரத் தொழிற்சாலை

‘இப்போது இல்லை; பிறகு யோசிக்கலாம்’

புதுடில்லி, ஆக. 31—

இன்று ஆந்திர முதன் மந்திரி கோபால ரெட்டியார், மத்திய உற்பத்தி இலாகா மந்திரி கே. சி. ரெட்டியைச் சந்தித்துப் பேசியபோது, ஆந்திராவில் ஒரு உர உற்பத்தித் தொழிற்சாலை நிறுவ வேண்டுமெனக் கேட்டதாகத் தெரிகிறது.

ஆந்திரா, அதிகமாக உரம் உபயோகிக்கும் மாநிலங்களில் ஒன்று என்றும், ஆந்திர மக்கள் ‘உரப் பைத்தியம்’ பிடித்தவர்களாயிருக்கின்றனர் என்றும், கோபால ரெட்டி எடுத்துக்காட்டினாராம்.

மேலும், உரத் தயாரிப்புக்குத் தேவையான, நிலக்கரியும், ஜிப்சமும் அருகில் உள்ள வட்டங்களில் கிடைப்பதால், சிக்கனமாக செலவில் உர உற்பத்தி இருக்க முடியும் என்றும் விளக்கிக் கூறினாராம்.

என்றாலும், மத்திய உற்பத்தி மந்திரி கே சி. ரெட்டியோ, இப்போது அது சாத்தியமில்லை என்றும், இனி புதியதாக உர உற்பத்தி தொழிற்சாலைகள் நிறுவும் விஷயம் பரிசீலிக்கப்படும்போது, சென்னையின் கோரிக்கையுடன் ஆந்திரக் கோரிக்கையும் சேர்த்து பரிசீலிக்கப்படும் என்று பதில் தந்தாராம்!

திட்டம் சீர்குலைந்து விட்டதாம்!

முன்னாள் அமைச்சர்மீது குற்றச்சாட்டு

ஜகார்தா, ஆக. 31—

இந்தோனேஷியா முழுவதும் முதன் முதலாக பொதுத் தேர்தலை வரும் செப். 29-ந் தேதியன்று நடத்துவது என்ற திட்டம் இப்போது சீர்குலைந்து விட்டதாகத் தெரிகிறது.

தேர்தலுக்குத் தயாராகவுள்ள பகுதிகளில் மட்டுமே குறிப்பிட்டபடி தேர்தல் நடைபெறும் என்றும், இதர பகுதித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்படும் என்றும், இந்தோனேஷிய செய்தி அறிவிப்பு இலாகா மந்திரி சுதன்மக்மூர் என்பவர் தெரிவித்திருக்கிறார்.

“சில பகுதித் தேர்தல் ஒத்திவைக்கப்படுவதற்குக் காரணம், அலி சஸ்த்ராமித் ஜோஜோ வின் தலைமையில் இருந்த மந்திரி சபை, அந்தப் பகுதிகளில் தேர்தலுக்கென பணம் கூட பல ஆண்டுகளாக ஒதுக்கிவைக்காது வந்திருப்பதுதான்,” என்று அந்த மந்திரி குற்றம் சுமத்தியிருக்கிறார்.

திரும்பி வருகின்றனர்!

ஆந்திர மாநிலம் அமைக்கப்பட்டபோது, சில தொழில் துறைகளுக்கு ஏற்றவாறு ஆந்திர அதிகாரிகள் கிடைக்கப் பெருததால், ஆந்திரரல்லாத பல அதிகாரிகள் சென்னை மாநிலத்திலிருந்து அங்கு மாற்றப்பட்டனர். இவர்களில் கெஜட் பதிவான 17 அதிகாரிகளையும், கெஜட் பதிவாகாத 60 ஊழியர்களையும் சென்னை மாநிலத்திற்கே திருப்பி அனுப்பிவிட ஆந்திர சர்க்கார் முடிவு செய்துள்ளதாம்.

நீதிமன்ற முடிவை அவமதித்த நீதிபதி!

அபராதம் விதிக்கப்பட்டார்

இம்பால், செப். 1—

நீதிமன்றத்தை அவமதித்ததாக மணிப்பூர் மாவட்ட நீதிபதியான மேஜர் வி. எஸ். சுந்தரம் என்பாருக்கு மணிப்பூர் மாநில நீதிஇலாகா ‘கமிஷனர்’ பிரிஜ்நாராயன் என்பார் ரூ. 50 அபராதம் விதித்ததுடன், மணிப்பூர் மாநில சிறை அதிகாரியான டி. சி தியாக்னம் என்பாரையும் எச்சரித்துள்ளார் என்று தெரிகிறது.

மணிப்பூர் ம சோ. கட்சித் தலைவரான ஆச்சா சிங் என்பார் இந்த வழக்கைத் தொடர்ந்திருந்தார்.

கடந்த 1955 ஏப்ரல் 11-ந் தேதியன்று, தான், இதர ஆறு பேர்களுடன் கைது செய்யப்பட்டதாகவும், தங்களது ஹேபியஸ்கார்பஸ்' மனு ஏப்ரல் 26-ந் தேதியன்று நீதி மன்றத்தால் ஏற்றுக் கொள்ளப் பட்டதாகவும், அதன்படி அன்றே தாங்கள் எல்லோரும் விடுதலை செய்யப்பட்டதாகவும், ஆனல், திரும்பவும் சிறைவாயிலிலேயே தடுப்புக் காவல் சட்டத்தின்கீழ் — நீதி மன்றம் ஏற்க மறுத்துவிட்ட மூன்று பழைய காரணங்களைக் காட்டி கைது செய்யப்பட்டதாகவும், இது, நீதிமன்றத்தின் உத்தரவை அவமதிப்பதாகும் என்றும் ஆச்சாசிங் வழக்காடினர்.

“நீதிபதி, சிறை அதிகாரி ஆகியோரின் செயல், ‘நீதிமன்ற முடிவுகள் சரிவர அமுல் செய்யப்படுகின்றன’ என்ற மக்களின் நம்பிக்கைக்கு ஊறு தேடுவதாக உள்ளதால், நீதிமன்றத்தை அவமதித்த குற்றம் புரிந்திருக்கின்றனர்,” என்று, மாநில நீதி மன்ற முடிவு கூறுகிறது.

‘இந்தியப் பண்பாடு’?

மிலான், ஆக 31—

உலக ‘சைக்கிள் சாம்பியன்’ பந்தயத்தில் கலந்துகொள்ள விருந்த ஏழு இந்திய ‘சைக்கிள்’ வீரர்கள், இப்போது பந்தயத்தில் கலந்து கொள்ள முடியாத ஒரு ‘சூழ்நிலை’ ஏற்பட்டுவிட்டதாம்

வார்சாவிலிருந்து அவர்கள் இங்கு நேற்று வந்திருக்கின்றனர்; ஆனல், அவர்களிடம் சைக்கிள் இல்லை; காரணம், வார்சாவில் தங்கியிருந்தபோது, தங்களின் நிர்வாகியான ஷோரப்பூட் என்பவர் தங்களது பணத்தைத் திருடிக் கொண்டு போய்விட்டதால், மிலான் வந்து சேருவதற்கு பணமில்லாது போகவே தங்கள் சைக்கிளை விற்று இங்கு வந்து சேர்ந்திருக்கின்றனர்.

மிலான் வந்தபோது, தங்கள் நிர்வாகி, உணவு விடுதி ஒன்றில் தங்கியிருப்பதைக் கண்டதும், அவர்கள் கோபமடைந்து நிர்வாகி மீது பாய்ந்திருக்கின்றனர்; உணவு விடுதிக்காரர் உடனே போலீசாரை அழைத்திருக்கின்றார்; போலீஸ் நிலையத்தில், ஷோரப்பூட், வார்சாவில் தான், பணப் பெட்டியையே பறிகொடுத்துவிட்டதாகக் கூறியிருக்கிறார்.

ஆனல், இவர் கூறிய சமாதானம், தங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது என்று, அந்த 7 சைக்கிள் வீரர்களும் தெரிவித்தனராம்; இப்போது அவர்கள் பந்தயத்தில் கலந்துகொள்ள முடியாது போய்விட்டதாம்!

வரவேற்கிறாராம்!

சென்னை, ஆக. 31—

“மலபார்—தமிழ்நாடு—திரு-கொச்சி ஆகிய பகுதிகள் இணைந்து ஒரே மாநிலமாக உருவாவதை நான்வரவேற்கிறேன்—ஆதரிக்கிறேன்,”

என்று, மலையாள சங்கம் ஒன்றின் சார்பில் நடைபெற்ற ‘ஓணம்’ பண்டிகையின்போது சென்னை நிதி மந்திரி சுப்பிரமணியம் பேசியிருக்கிறார்.

தங்கவயல் தொழிலாளர்

மதுவிலக்கை ஒழிக்கக் கோருகின்றனர்

இராபர்ட்சன்பேட்டை, ஆக 31—

கோலார் தங்கவயல் தொழிலாளர்கள், மதுவிலக்கு ஒழிக்கப்பட்டு, மீண்டும் தாங்கள் கள் குடிக்க அனுமதிக்கப்படவேண்டும் என்று ஒருமுகமாகத் தெரிவித்தனராம்.

தொழிலாளர் கூட்டமொன்றில் மைசூர் முதன் மந்திரி அனுமந்தையா பேசுகையில், கூட்டத்தின் ஒரு பகுதியிலிருந்து, ‘மதுவிலக்கை ஒழிக்கவேண்டும்,’ என்று குரல் எழுப்பப்பட்டிருக்கிறது.

இதைக் கேட்ட முதன் மந்திரி, ‘கூட்டத்திலிருப்பவர்களில் எத்தனை பேர் மதுவிலக்கு ஒழிய வேண்டும் என்று விரும்புகின்றனர்’ என்று கேட்டாராம்.

கூடியிருந்தவர்களில் பெரும்பாலானோர், ‘மதுவிலக்கு ஒழிய வேண்டும்,’ என்று கைதூக்கியிருக்கின்றனர்.

உடனே முதன் மந்திரி, ‘உங்களுக்குக் கிடைக்கும் சம்பளம் உங்கள் குடும்பத்திற்கு, தினம் இரண்டு வேளைக்குக் கூடப் போதவில்லை என்று கூறப்படுகிறது; என்றாலும், நீங்கள் மதுவருந்த அனுமதி வேண்டுகிறீர்கள்; ஏனோ தெரியவில்லை! நீங்கள் குடிப்பதைப்பற்றி, தனிப்பட்ட முறையில் எனக்கு எந்தவிதத் தடையும் இல்லை; ஆனல், நாட்டில், பெரும்பான்மையினர் கருத்திற்குத்தான் மதிப்புத் தரமுடியும்; அதுதான் அமுல் செய்யப்படும்; வேண்டுமானல் நீங்கள், நாட்டு மக்களிடம், உங்கள் கொள்கையை எடுத்துச் சொல்லி, அவர்களை உங்கள் கருத்தின் பக்கம் திருப்புங்கள்,’ என்று கூறியிருக்கிறார்.

இது கேட்ட தொழிலாளர்கள், ‘தானாகவே நாங்கள் செய்கிறோம்—எங்களால் முடியும்’ என்று குறிப்பிட்டிருக்கின்றனர்.

புதுடெல்லி, செப். 1—

படித்தவர்களிடையே வேலையின்மையைப் போக்குவதற்காக பல்வேறு மாநில சர்க்கார்களுக்கு 1954 55-ம் ஆண்டில் மொத்தம் 3,40,71,619 ரூபாய் ஒதுக்கப்பட்டதாம்.

****

தலைமைக் கழகம் : அறிக்கை—25/55

தி. மு. கழகமும் நகர சபைத் தேர்தலும்

ஸ்தல ஸ்தாபன தேர்தல்களில் அரசியல் கட்சிகள் போட்டியிட வேண்டிய அவசியமில்லை என்ற கொள்கையை ஒட்டி, வரும் நகரசபைத் தேர்தல்களில் தி. மு. கழகம் கட்சி அடிப்படையில் பங்கு கொள்ளாது.

தி மு. கழகத்தைச் சார்ந்தவர்கள், கழகத்திற்கும், கழகக் கொள்கைகளுக்கும் களங்கம் ஏற்படாத வகையில், தனிப்பட்ட முறையில் வேண்டுமானுல் நகரசபைத் தேர்தலில் போட்டியிடலாம்.

தி. மு. கழகத்தின் மூலாதாரக் கொள்கைகளைப் பொறுத்து மாறுபட்ட கருத்துடைய எந்த அரசியல் கட்சியோடும் தி. மு. கழகத் தோழர்கள் இணைந்து நின்றோ அல்லது கூட்டாகச் சேர்ந்தோ தேர்தலில் போட்டியிடக் கூடாது.

தி. மு. கழகத் தோழர்கள் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் ஒரே இடத்தில் போட்டியிட முனைந்தால், அந்த இடத்திற்குரிய தி. மு. கழகக் கிளை தலையிட்டுக் கழகத் தோழர்களுக்குள்ளே ஏற்படும் போட்டியைத் தவிர்ப்பதற்கான நடவடிக்கையை எடுத்துக்கொள்ள வேண்டும்.

தேர்தலில் போட்டியிடும் தி. மு. கழகத் தோழர்கள், கூடுமான வரையில், கூட்டணி போன்ற அமைப்புகளில் இணைவதைத் தவிர்த்துத் தனிப்பட்ட முறையில் போட்டியிட முயலல் வேண்டும்.

கட்சி ஆதிக்கத்தை எதிர்க்கக் கூட்டணி எங்கேயாவது அவசியப்படுமாயின், போட்டியிடும் தி. மு. கழகத் தோழர்கள், போதுமான விளக்கம் தந்து, அதற்கான தலைமைக் கழகத்தின் அனுமதியைப் பெறலாம். கூட்டணி, தனிப்பட்ட முறையில் போட்டியிடுபவர்களின் கூட்டணியாக இருக்க வேண்டுமே ஒழிய, கட்சிகளின் கூட்டணியாக இருக்கக் கூடாது.

எந்தத் தி. மு. கழகக் கிளையும், ‘தேர்தலில் யாருக்கு வாக்கு அளிப்பது’ என்று முடிவு எடுக்கக் கூடாது. வாக்கு அளிப்பது என்பது, அவரவர்களின் தனிப்பட்ட விருப்பத்திற்கு விடப்பட வேண்டியதொன்றாகும். பொதுவாக, கட்சியின் பெயரால் போட்டியிடுபவர்களுக்கு ஆக்கந்தர வேண்டாம்.

தேர்தல் பணிகளில் ஈடுபடும் தி. மு. கழகத் தோழர்கள், கழகத்தின் கொள்கைகளுக்கு ஊறு ஏற்படாத வகையிலும், மேலே கூறப்பட்ட கருத்துக்களுக்கு மாறுபடாத வகையிலும், தனிப்பட்ட முறையில் பணியாற்ற வேண்டும்.

“அறிவகம்,” சென்னை 13-8-1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

கழகக் கூட்டம்

★

அறந்தாங்கி
வ. உ. சி. திடலில்
4-9-55 மாலை 6 மணிக்கு
பேசுவோர்:
டி. கே. சீனிவாசன்
சத்தியவாணிமுத்து
ந. தர்மலிங்கம்

வள்ளுவர் வாசகசாலை திறப்பு விழா

3—9—55 மாலை 4 மணிக்கு, செங்குன்றம் அடுத்த தீர்த்தகரையம்பட்டு(பாலவாயல்) கிராமத்தில், தோழர் டி சண்முகம் எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெறும் தோழர்கள் கண்ணதாசன், சி. கே. மாதவன் ஆகியோர் பேசுவர். தோழியர் அருண்மொழி மேற்படி வாசகசாலையை திறந்து வைப்பார்.

சொற் பயிற்சிக் கூட்டம்

3—9—55 மாலை 6½ மணிக்கு, சென்னை-இராயபுரம், எண் 59, மன்னார்சாமி கோயில் தெருவிலுள்ள வடசென்னை குறள் நெறிக் கழக அறையில், தோழர் ந. சண்முகம் தலைமையில், ‘சொல் வன்மை’ என்னும் பொருள் குறித்து தோழர்கள் பலர் பேசுவர்.

திருமணங்கள்

★

4—9—55 காலை 8½ மணிக்கு, சென்னை-திருவொற்றியூர் ஐரோடு, எண் 431, எக்கலூர் சுப்பிரமணிய செட்டி சத்திரத்தில், தோழர் சி. வி. எர். அண்ணுமலை தலைமையில், தோழர் மா. வெ நாராயணசாமி—தோழியர் சி செயலட்சுமி திருமணம் நடைபெறும். சி. என். அண்ணுதுரை அவர்கள் மணமக்களை வாழ்த்திப் பேசுவார்.

* * *

4—9—55 காலை 9 மணிக்கு, சென்னை-கோடம்பாக்கம், புலியூர், எண் 2, செங்கம்மன் கோயில் தெருவில், தோழர் க. இளங்கீரன்—தோழியர் பார்வதி திருமணம், தோழர் வ. சங்கரநாராயணன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் இளம்பரிதி, சைதை சம்பந்தம், தோழியர் தேசியமணி ஆகியோர் பேசுவர்.

* * *

4—9—55 காலை 8 மணிக்கு, சென்னை-திருவொற்றியூர் அடுத்துள்ள மணலியில், தோழர் காசிநாதன்—தோழியர் முனியம்மாள் திருமணம், தோழர் டி. சண்முகம் எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெறும். தோழர்கள் வி. என். கோவிந்தராசன், ஏ. எஸ். ராமன் ஆகியோர் பேசுவர்.

* * *

4—9—55 காலை 8 மணிக்கு, திண்டுக்கல், போடிநாய்க்கன்பட்டி, 47-ம் இல்லத்தில், தோழர் கே. வைரவன்—தோழியர் தனபாக்கியம் திருமணம், தோழர் பி. சமதர்மம் எம்.சி., தலைமையில் நடைபெறும்.

* * *

5—9—55 காலை 9 மணிக்கு, வலையபட்டி (பொன்னமராபதி) யில், தோழர் எம்.கே. ஆத்மநாதன்—தோழியர் ஏ. எஸ் தனலட்சுமி திருமணம் நடைபெறும்.

* * *

5—9—55 காலை 9 மணிக்கு, உ. தா. வீரசோழபுரம் மணமகன் இல்லத்தில், தோழர் சிங்காரம்—தோழியர் லோகாம்பாள் திருமணம், தோழர் தெ. சதாசிவம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் பொன். தருமன், கி. அரங்கநாதன், ம. கோ. மணி, அ. நல்லதம்பி ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.